මුදල්, ආර්ථික ස්ථායීකරණ සහ ජාතික ප්‍රතිපත්ති අමාත්‍යාංශය
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
MINISTRY OF FINANCE, ECONOMIC STABILIZATION AND NATIONAL POLICIES

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව
செயலகம், கொழும்பு 01, இலங்கை.
The Secretariat, Colombo 01, Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011-2484500, 011-2484600, 011-2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011-2449823
වෙබ් අඩවිය / இணையதளம் / Website: www.treasury.gov.lk

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல<br>My No | | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No | | දිනය<br>திகதி<br>Date | 2023.02.22 |

சுற்று நிருப இல : DFD/ 2023-1 (I)

செயலாளர், பொது நிருவாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
செயலாளர், மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு
செயலாளர், பாதுகாப்பு அமைச்சு
அனைத்து மாவட்ட செயலாளர்கள்/ அரசாங்க அதிபர்கள்

**2022/23 பெரும் போகத்தில் அரசாங்கத்தின் நெல் கொள்வனவு மற்றும் நெல் கையிருப்பு அகற்றல் நிகழ்ச்சித் திட்டத்திற்கான கண்காணிப்பு குழுக்களை நியமித்தல்**

சிறிய மற்றும் நடுத்தரளவிலான நெல் ஆலை உரிமையாளர்கள்/ கூட்டுறவுச் சங்கங்களூடாக நெல் கொள்வனவு செய்தல் மற்றும் நெற் கையிருப்புகளை அரிசியாக்குதல் வேலைத்திட்டம் தொடர்பில் வெளியிடப்பட்ட DFD/ 2023-1 ஆம் இலக்கத்தையுடைய சுற்றுநிருபத்தின் மூலம் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு மேலதிகமாக.

2.0 இந்த வேலைத்திட்டத்தினை இரண்டு மாத குறுகிய காலப்பகுதியினுள் நாடளாவிய ரீதியில் அமுல்படுத்த வேண்டியுள்ளதாலும், இதனை மேலும் பன்முகத்தன்மையுடன் நடைமுறைப்படுத்துவது இன்றியமையாதது என்பதாலும், தேசிய, மாவட்ட மற்றும் பிராந்திய மட்டங்களில் நிகழ்ச்சித் திட்டக் கண்காணிப்பு மற்றும் பின்னூட்டம் தொடர்பில் குழுக்களை நியமிக்க 14.02.2023 ஆம் திகதியன்று ஜனாதிபதி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இது தொடர்பில் தற்போதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் பின்வருமாறு.

2.1 தேசிய மட்டத்திலான குழு

2023.01.16 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இந் நிகழ்ச்சித் திட்டத்தினை மேற்பார்வை செய்யும் பொருட்டு கமத்தொழில் அமைச்சர், வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் ஆகிய அமைச்சர்களை உள்ளடக்கிய தேசிய மட்டத்திலான குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. மேலும், இக் குழுவின் கண்காணிப்பாளர்களாக 2023.02.13 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் செஹான் சேமசிங்க அவர்கள், பிரமித பண்டார தென்னகோன் அவர்கள் மற்றும் அனுப பஸ்குவல் அவர்கள் ஆகிய இராஜாங்க அமைச்சர்கள் மூவரும் நியமிக்கப்பட்டனர்.

இதற்கு மேலதிகமாக, 2023.02.13 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இந்த வேலைத் திட்டத்தினை துரிதமாகவும், வினைத்திறனாகவும் நடைமுறைப்படுத்துவதற்கு வசதியளிக்கும் பொருட்டு பின்வரும் அதிகாரிகளைக் கொண்ட தேசிய மட்டக் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

i. திறைசேரியின் பிரதிச் செயலாளரொருவர் (தலைவர்)
ii. கமத்தொழில் அமைச்சின் மேலதிக செயலாளரொருவர்
iii. மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் மேலதிக செயலாளரொருவர்
iv. வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளரொருவர்
v. பணிப்பாளர் நாயகம், திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்
vi. பணிப்பாளர் நாயகம், அபிவிருத்தி நிதித் திணைக்களம்

இவ் வேலைத் திட்டத்திற்குரிய அதிகாரிகளின் தேசிய மட்டத்திலான குழுவிற்கான கண்காணிப்புக் குழுவை நியமிப்பது தொடர்பில் கௌரவ சனாதிபதியின் செயலாளரினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் பின்வரும் அதிகாரிகளும் உள் வாங்கப்பட்டுள்ளனர்.

i. சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளரொருவர்
ii. பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளரொருவர்
iii. ஆணையாளர் நாயகம், கமநல அபிவிருத்தித் திணைக்களம்
iv. தவிசாளர், நெல் சந்தப்படுத்தல் சபை

3.0 மாவட்ட மற்றும் பிராந்திய குழுக்களுக்காக பின்வருமாறு அதிகாரிகள் முன்மொழியப்பட்டுள்ள அதேவேளை, இக் குழுக்களின் முறையான நியமனம், பொது நிருவாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் மற்றும் அந்தந்த மாவட்ட செயலாளர்கள்/அரசாங்க அதிபர்களினால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

3.1 <u>மாவட்ட மட்டத்திலான முன்னேற்ற மதிப்பாய்வுக் குழு</u>

நெல் கொள்வனவு மற்றும் அரிசி விநிநோகம் தொடர்பில் (எதிர்வரும் 08 வார காலத்தினுள் வாராந்தம் ஒன்றுகூடி உரிய தீர்மானங்களை மேற்கொள்வதற்கு) பின்வரும் அதிகாரிகளை உள்ளடக்கிய மாவட்ட மட்டத்திலான முன்னேற்ற மதிப்பாய்வுக் குழுவை நியமித்தல்.

i. மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர்
ii. மாவட்ட செயலாளர்/ அரசாங்க அதிபர்
iii. மாகாண விவசாய செயலாளர்
iv. மாகாண விவசாயப் பணிப்பாளர்
v. கமநல சேவை உதவி ஆணையர்
vi. சமுர்த்தி மற்றும் போசாக்கு வேலைத்திட்டத்தின் உதவி மாவட்ட தலைவர் மற்றும் சுகாதார மற்றும் கல்வி அதிகாரிகள்
vii. சர்வோதய மாவட்ட தலைவர்
viii. சணச மாவட்ட தலைவர்

மாவட்ட மட்டக் குழுக்களின் ஒத்துழைப்புடன் நெல் கொள்வனவு மற்றும் அரிசி விநிநோக செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இச் செயற்பாடுகள் முடிவடைந்த பின் உடனடியாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் உரிய பின்னூட்டல் செயல்முறைகளூடாக, முறையான வகையிலே அனைத்து

நடவடிக்கைகளும் இடம்பெற்றுள்ளனவா என்பதை பரிசீலனை செய்து (ஏப்ரல் மாதத்தின் இறுதி வாரம் வரை), ஒவ்வொரு மாவட்ட செயலாளர்/ அரசாங்க அதிபரும் திறைசேரியினால் வழங்கப்பட்ட நிதியினை உரிய முறையிலே பயன்படுத்தி நெல் கொள்வனவு மற்றும் அரிசி விநியோக செயல்முறையினை மேற்கொண்டுள்ளமையை இக் குழு உறுதி செய்யும்.

3.2 <u>பிராந்திய கண்காணிப்பு குழு (i)</u>

நெல் அறுவடைகளை கொள்வனவு செய்யும் மத்திய நிலையங்களாக பெயரிடப்பட்டுள்ள தனியார் துறையின் சிறிய மற்றும் நடுத்தரளவிலான நெல் ஆலைகள்/ கூட்டுறவுச் சங்கங்களின், பிரதேச செயலாளர் பிரிவு முழுவதும் பரந்து காணப்படும் களங்சியசாலைகளுக்கு, வாரத்தில் ஒருமுறை சென்று கள ஆய்வினை மேற்கொண்டு லொக் குறிப்புக்களை பேணி, நெல் கொள்வனவு, கையிருப்புக்களை அரிசியாக்கல் மற்றும் களஞ்சியப்படுத்தல் என்பவற்றை குறிப்பிட்ட கால அட்டவணையின் பிரகாரம் மேற்பார்வை செய்வதற்காக இக் குழுவை நியமிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

i. பிரதேச அபிவிருத்திக் குழுத் தலைவர்
ii. பிரதேச செயலாளர்
iii. கமநல அபிவிருத்தி பிரதேச அலுவலகர்
iv. சமுர்தி உதவி ஆணையாளர்
v. உதவி கமநலப் பணிப்பாளர்
vi. மகாவலி குடியிருப்பு மற்றும் வலய முகாமையாளர்

3.3 <u>பிராந்திய கண்காணிப்பு குழு (ii)</u>

நெல் கொள்வனவு மற்றும் நெல் இருப்புக்களை அரிசியாக்குதல் நிகழ்ச்சித்திட்டத்திற்கு சமாந்தரமாக குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களை உரிய முறையில் இனங்கண்டு அவர்களுக்கு அரிசி விநியோகம் செய்யும் செயல்முறைகள் நடைபெறுவதால், அச் செயல்முறைகள் மிகுந்த வெளிப்படைத் தன்மையுடன் நடைபெறுவதை உறுதிசெய்வதற்காக ஒரு பிரதேச மட்டத்திலான பிரத்தியேக குழுவொன்று நிறுவப்பட வேண்டும். இக் குழு வாரந்தம் கூடி, முறையான மேற்பார்வை மற்றும் முன்னேற்ற மதிப்பாய்வுகளுடன் இரண்டு மாத காலத்தினுள் இந் நிகழ்ச்சித்திட்டம் முறையாகச் செயல்படுத்தப்படுவதை மேற்பார்வை செய்ய வேண்டும்.

i. பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர்
ii. உதவிப் பிரதேச செயலாளர்
iii. பிரதி/ உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்)
iv. சமுர்த்தி அபிவிருத்தி உதவிப் பணிப்பாளர்
v. சனச சங்கத்தின் அதிகாரியொருவர்
vi. கமநல சேவைப் பிராந்திய அதிகாரி
vii. வலயக் கல்விப் பணிப்பாளர்
viii. பிற பொருத்தமான பிரதேச மட்டத்திலான அரச மற்றும் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள்

4.0 மேலே விவரிக்கப்பட்டுள்ளபடி, தேசிய மட்டத்திலான குழு தொடர்பில் இல 2.1 இன் கீழ் முன்மொழியப்பட்டுள்ள அதிகாரிகளை முறைப்படி நியமித்து, அந்த அதிகாரிகளை ஒருங்கிணைத்துக்கொள்வதும், இல. 3.1, 3.2 மற்றும் 3.3 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு

மாவட்ட மற்றும் பிராந்திய மட்டத்திலான குழுக்களை நியமிப்பதும், பொது நிருவாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் மற்றும் அந்தந்த மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர்களினால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**ஒப்பம்/ மஹிந்த சிறிவர்தன**
**திறைசேரியின் செயலாளர்**

பிரதிகள்:

1. சனாதிபதியின் செயலாளர், சனாதிபதி செயலகம் – தகவலுக்காக.
2. பிரத அமைச்சரின் செயலாளர், பிரதம அமைச்சர் அலுவலகம் – தகவலுக்காக.
3. செயலாளர், கமத்தொழில் அமைச்சு – தகவலுக்காகவும் தே.ந. எடுக்கவும்.
4. செயலாளர், சுகாதார அமைச்சு – தகவலுக்காகவும் தே.ந. எடுக்கவும்.
5. பணிப்பாளர் நாயகம், தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம் - தகவலுக்காகவும் தே.ந. எடுக்கவும்.
6. பணிப்பாளர் நாயகம், திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் - தகவலுக்காகவும் தே.ந. எடுக்கவும்.
7. பணிப்பாளர் நாயகம், சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் - தகவலுக்காகவும் தே.ந. எடுக்கவும்
8. பணிப்பாளர் நாயகம், கமத்தொழில் திணைக்களம் - தகவலுக்காகவும் தே.ந. எடுக்கவும்
9. ஆணையாளர் நாயகம், கமநல அபிவிருத்தித் திணைக்களம் - தகவலுக்காகவும் தே.ந. எடுக்கவும்
10. பணிப்பாளர் நாயகம், சிவில் பாதுகாப்புத் திணைக்களம் - நிகழ்ச்சித் திட்டத்திற்கு அவசியமான பாதுகாப்பினை வழங்குவதற்காக.
11. கணக்காய்வாளர் நாயகம், தேசிய கணக்காய்வு அலுவலகம் – தகவலுக்காக.
12. தவிசாளர், நெல் சந்தப்படுத்தல் சபை - தகவலுக்காகவும் தே.ந. எடுக்கவும்.